# பட்டயம்

மலர் - 07 அக்டோபர் - 2011 இதழ் - 12

Date of Issue : 01-10-2011

Place of Publication : 86 / 222H, Main Road,
Panagudi - 627 109.
Tirunelveli District, Tamil Nadu.

Volume : 7

Issue : 12 Price Per Copy : Rs.5.00



தீவிரவாதங்களுக்குத்
தப்புவியும் கர்த்தாவே! (சங்கீதம் 18)

**SAVE US FROM TERRORISM & TERRORISTS (PSALM - 18)**

## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.in

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன்" (ஆகாய் 2/7)

# ஆசிரியர் கடிதம்

பூமியிலே மனுஷனுடைய அக்கிரமம் பெருகி விட்டபடியால் ஆழத்தின் ஊற்றுக்கண்களை தேவன் அடைக்கிறார். ஆகவே பஞ்சமும் வருகிறது. அக்கிரமம் பெருகப் பெருக பஞ்சமும் பெருகும். குடிதண்ணீர் பஞ்சமும் வரும். பை நிறைய பணம் இருக்கும், பொருளும் இருக்கும், குடிக்க தண்ணீர் இல்லாவிட்டால் எந்த பயனும் இல்லை. அக்கிரமம் பெருகும் போது ஆண்டவர் வானத்தை அடைப்பார், பூமியின் ஊற்றுக் கண்ணையும் அடைப்பார், பாவத்தின் மேல் பாவம் செய்தால், பஞ்சத்திற்குத் தப்பிக் கொள்ள முடியாது. தேசத்திலே பஞ்சம் வரும் என்பதை ஆண்டவர் முன் கூட்டியே அறிவித்திருக்கிறார் (யோவேல் 1/4).

இப்பொழுது எந்த காய்கறியும் பூச்சி மருந்து அடிக்காவிட்டால் புழுத்துப் போகும். காய்கறிக்குள் விஷமருந்து இருக்கிறது. நாம் காயும் தின்கிறோம், விஷமும் தின்கிறோம். மறைமுகமான பஞ்சம் இப்போதே இருக்கிறது. ஏனென்றால் பூச்சி மருந்து அடிக்காத எந்த காய்கறியும் கிடையாது. இது ஆண்டவரின் தண்டனை. பஞ்சத்தை அனுப்புகிறார், புழு பூச்சியையும் அனுப்புகிறார். 100 மூடை அரிசி என்றால் 40 மூடையை எ□தின்று விடுகிறது. Demet மருந்து வைத்தாலும் எ□ சாவதில்லை. முற்காலங்களில் 1 துண்டு மீனை வைத்து 1 plate சோறு சாப்பிட்டு விடலாம். மச்சங்கள் அவ்வளவு ருசியாக இருந்தது. ஆனால் இப்போதுள்ள மீன்களில் ருசி இல்லை. அக்காலத்திலே சோறு பொங்கினால் மணம் வரும். இப்போது மணம் இல்லை, இது மறைமுகமான பஞ்சமாகும். யோவேல் 1 தீர்க்கதரிசன வசனங்கள் நிறைவேறுகின்றன. பச்சைப்புழு விட்டதை வெட்டுகிளி தின்றது. இப்படி பட்ட அழிக்கிற காரியங்களெல்லாம் பெருகிவிட்டது. இது ஆண்டவரின் தண்டனை.

வசன பஞ்சம் வரும். அநேக இடங்களில் வசனம் போதிக்கப்பட வில்லை. திருவசனம் கேட்க மனிதனுக்கு விருப்பமுமில்லை. இந்த கடைசி நாட்களில் அநேகர் வேதத்தை வாசிக்க மறந்து விடுகிறார்கள். முற்காலங்களில் இருந்த பரிசுத்தவான்கள் வேதத்தை தினமும் எத்தனையோ மணி நேரம் வாசித்து வந்தார்கள். வசனம் வாசிக்கவும் கேட்கவும் மனுஷனுக்கு மனம் இல்லை. ஆகவே மறைமுகமாக தேசத்திலே வசனபஞ்சம் இருக்கிறது. வசனத்திற்கு Bible-ல் பஞ்சம் இல்லை. ஆனால் அதை உட்கொள்வதில் பஞ்சம் இருக்கிறது. போஜன

ப□யும், பானப□யும் கர்த்தரின் ஆலயத்தை விட்டு அற்றப் போயின என யோவே□ல் வாசிக்கிறோம். இது கடைசி காலத்தில் நடக்கும் காரியங்கள், போஜன ப□என்பது திருவசனமாகிய ஞானப்பாலைக் குறிக்கும். பானப□என்பது இராப்போஜனத்தைக் குறிக்கும். ஞானப்பாலை குடிக்கும் போது தான் நம் ஆத்துமா புஷ்டியாகும். திருவசனத்துக்கு முக்கியத்துவம் கொடுப்போம், வாசிப்போம், தியானிப்போம், கைக்கொள்ளுவோம், பிறருக்கும் கற்றுக் கொடுப்போம். அவர் வருகைக்கு ஆயத்தமாவோம்.

கர்த்தர் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக. அவர் வசனத்தைக் கைக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்.

ஆமென்.

## ஜெபங்கள்

### 1. கண்பார்வைக்காக ஜெபம் (உபா 34/7)

குருடரின் கண்களைத் திறந்தவரே! அப்பா பிதாவே! உம் கரங்கள் எங்கள் 2 கண்களையும் தொடுவதாக. கண்களுக்கு வெளிச்சம் தாரும், பலம் தாரும், கண் சம்பந்தப்பட்ட வியாதிகள் தாக்காதபடி காத்துக் கொள்ளும். மோசே மரிக்கும் வரை அவன் கண் பார்வை குறையாது இருந்தது போல நான் மரிக்கும் வரை என் கண்களை கண்மணியைப் போல் காத்தருளும். கண்களை புது சிருஷ்டியாக மாற்றும், ஜீவனுள்ள நாளெல்லாம் என் கண்களைத் தெளிவாக்கும். எங்கள் கண்களைத் தொடும். உம் கரம் எங்கள் கண்களைத் தொடுவதினால் பார்வை கிடைப்பதாக. கண்களிலே உம் இரத்தத்தின் வல்லமை பாய்வதாக. உம் அன்பு, இரக்கம் எங்கள் கண்களுக்கு கிடைப்பதாக, நீ பார்வை அடைவாயாக என்ற வார்த்தையின்படி பார்வையைக் கொடுப்பீராக ஆமென்.

### 2. ஆண்டவர் நம்மைக் கழுவி பரிசுத்தப்படுத்தும் படியாக ஜெபம் : (Iயோ 1/7)

கர்த்தாவே! பாவியென்று என்னை ஒத்துக் கொள்கிறேன். என் இதய வீட்டிலே இன்னின்ன அருவருப்புகள் இருக்கிறது. அவைகள் மேல் வெறுப்பு தாரும். என் வாயின் வார்த்தைகள் சுத்தமாக இல்லை. என் கண்களின் பார்வை சுத்தமாக இல்லை. என் கேட்குதல் சுத்தமாக இல்லை. என் கரத்தின் கிரியைகள் சுத்தமாக இல்லை. என் நடை, உடை,

பாவனைகள் சுத்தமாக இல்லை. என் ஜீவியத்தில் சுத்தமில்லை. என் மனச்சாட்சியும், ஆத்துமாவும், ஆவியும் சுத்தமாக இல்லை. அசுத்த உதடுகளுள்ள மனுஷன் நான், நீரோ பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர். பரிசுத்த இரத்தம் சிந்தியவர். உம்மைப் போல பரிசுத்தமுள்ளவர் ஒருவரும் இல்லை. கிருபையால் என் பாவங்களை மன்னியும், பாவ சுபாவங்கள் நீக்கும், என் பாவங்களையெல்லாம் அறிக்கை செய்கிறேன். அவைகளையெல்லாம் விட்டுவிடும்படி தீர்மானம் எடுக்கிறேன். ஆண்டவரின் மனதுருக்கம் என்மேல் பாய்வதாக, உம் இரத்தம் என்னை கழுவுவதாக, என் ஆவி, ஆத்துமா, சரீரம், மூளை, இருதயம், மனச்சாட்சி, உள்ளிந்திரியம், உள்மனம், என் கிரியைகள், வார்த்தைகள் எல்லாவற்றை யும் சீர்படுத்தும் கர்த்தாவே! உம் இரத்தத்தால் என்னைக் கழுவி, உறைந்த மழையிலும் வெண்மையாக்கும் ஆமென்.

### 3. இழந்த ஆசீர்வாதங்களை மீண்டும் பெற்றுக் கொள்ளும் படியாக ஜெபம் : (யோபு 29/2; 42/10)

அப்பா பிதாவே! என் வாழ்க்கையில் எத்தனையோ காரியங்களை இழந்தேன்; பொருளை இழந்தேன்; பணத்தை இழந்தேன்; மதிப்பு, மரியாதையை இழந்தேன். படிப்பு, வேலை, தொழில், சரீரசுகம், பெலம், சௌக்கியத்தை இழந்தேன். நிம்மதி, ஞானத்தை இழந்தேன், எனக்கு அருமையானவர்களை, நண்பர்களை இழந்தேன். எனக்கு நீர் எல்லாம் கொடுத்திருந்தீர். கொடுத்தவைகளையெல்லாம் இழந்தேன். சத்துருக்களும், சாத்தானும் பறித்துவிட்டார்கள். கொடுத்தவர், மறுபடியும் கொடுக்கவல்லவர் என்பதை விசுவாசிக்கிறேன். முந்தின சீருக்கு திரும்ப பண்ணும் கர்த்தாவே! யோபுவின் வாழ்க்கையிலே இரட்டிப்பான நன்மையைக் கொடுத்தீரே! முன் வாழ்க்கையை பார்க்கிலும் என் பின் வாழ்க்கை ஆசீர்வதிக்கப்படுவதாக, இழந்தவைகள் யாவும் பெற்றுக் கொள்ளும் பாக்கியம் உம்மால் உண்டாவதாக. ஆமென்.

### 4. கனவீனங்கள் மாற ஜெபம் : (ஏசாயா 25/8)

அப்பா பிதாவே! என் வாழ்க்கையிலே சில கனவீனங்கள் இருக்கிறது. சில நிந்தைகளை நான் சுமக்க வேண்டியதாய் இருக்கிறது. மனுஷனின் அவமதிப்புகளை சுமக்க வேண்டியதாய் இருக்கிறது. இதன் காரணம் என் பாவமாக இருக்கலாம் அல்லது மற்றவர்களின் பாவமாக இருக்கலாம் அல்லது என் குடும்ப சூழ்நிலையாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் கனவீனங்களை மாற்றும். தம் ஜனத்தின் நிந்தையை

முற்றிலும் நீக்குகிற கர்த்தராய் இறங்கி வருவீராக. நிந்தை அல்ல கர்த்தாவே! மனுஷனால் கனம் உண்டாவதாக. கனவீனங்கள் யாவும் மாறிப் போவதாக. சத்துருக்கள் முன்பாக, சாத்தான் முன்பாக உயர்த்தும் கர்த்தாவே! ஆமென்.

**5. பெலவீனக்கட்டு மாற ஜெபம் : (லூக். 13/11-13)**

அப்பா பிதாவே! 18 வருடமாய் எவ்வளவும் நிமிர முடியாத கூனியின் பெலவீனத்தின் ஆவியைத் துரத்தினீரே! பெலனைக் கொடுத்தீரே! என்னை உருவாக்கியவரே! ஸ் என் கண்களை உம் கரத்தில் கொடுக்கிறேன். என் கண்களிலுள்ள பெலவீனபடுத்தும் ஆவி அழிந்து போவதாக. என் கண்களை பெலப்படுத்தும். என் நாவிலுள்ள பெலவீனத்தின் ஆவியை முற்றிலும் மாற்றிப் போடும். என் வார்த்தைகளில் தெளிவு உண்டாக்கும். என் காதுகளை உம்மிடம் கொடுக்கிறேன். காதுகளிலே செயல்படுகிற பெலவீனத்தின் ஆவிகளை முற்றிலும் துரத்திப் போடும்; சுட்டெரியும் கர்த்தாவே! என் மூளையைக் கொடுக்கிறேன். என் மூளையை தாக்குகிற பெலவீனத்தின் ஆவி இயேசுவின் இரத்தத்தால் அழிந்து போவதாக. வேலை செய்ய விடாதபடிக்கு காணப்படும் களைப்பு உண்டாக்குகிற ஆவி, சீக்கிரத்தில் சோர்வு உண்டாக்கும் ஆவி முற்றிலும் அழிந்து போவதாக. பெலவீனப்படுத்தும் ஆவிகளால் வந்த வியாதிகள் என் சரீரத்தை விட்டு முற்றிலும் மாறிப் போவதாக. ஆண்டவர் புது பெலன் தரும்படியாக ஜெபிக்கிறேன். ஆமென்.

**6. தேவபெலன் பெற்றுக் கொள்ள ஜெபம் : (உபா. 33/17; அப் 1/8)**

அப்பா பிதாவே! சிம்சோன் பார்வையற்றவனாயிருந்த போதும் அவனை பெலப்படுத்தினீரே! உம் பெலத்தால் நிரப்பி சத்துருக்களுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணினீரே! அவன் உயிரோடு இருக்கும் நாட்களைக் காட்டிலும், மரித்த வேளையிலே உம் தயவுள்ள சித்தபடியாக பெலிஸ்தியர் மேல் வெற்றி எடுத்தானே! உம் நாமத்திற்கு முன்பாக எந்த நாமமும் நிற்கக் கூடாதபடிக்கு எல்லா நாமங்களுக்கும் மேலான நாமம் உடையவரே! உம் நாமத்தின் வல்லமை பாகாலின் வல்லமைகளை அழிப்பதாக. சிம்சோனைப் போல் எம்மை பெலப்படுத்தும். காண்டாமிருகத்துக்கொத்த பெலனைத் தாரும், உன்னத பெலனை தாரும்; பரிசுத்த ஆவியின் பெலனைத் தாரும். எங்களை பெலவீனப்படுத்துகிற சகல ஆவிகளும் உம்முடைய ஆவியால் முற்றிலும் அழிந்து போவதாக.

புது பெலன் கட்டளையிடும். ஆவியிலே பெலன், ஆத்துமாவிலே பெலன், சரீரத்திலே பெலன், கண்களிலே பெலன், காதுகளிலே பெலன், மூளையிலே பெலன், இருதயத்திலே பெலன், நரம்புகளில் பெலன், ஆண்டவர் எமக்கு தருவீராக 10 மடங்கு பெலன் தருவீராக. பெலத்தின் மேல் பெலம் தாரும். ஆமென்.

**7. ஆண்டவர் நம்மை சுற்றி அக்கினி மதிலாய் வரும்படி ஜெபம் : (சகரியா. 2/5; யோபு 1/10)**

நான் அதற்கு சுற்றிலும் அக்கினி மதிலாயிருந்து அதன் நடுவில் மகிமையாய் இருப்பேன் என்று சொன்னவரே! சாத்தானும், சாத்தான் ராஜ்யங்களும் எங்களுக்கு விரோதமாக கொந்தளித்தாலும் ஆண்டவர் தாமே எங்கள் பட்சத்தில் இருந்து அக்கினி மதிலாய் இருந்து, சாத்தானின் அக்கினி எதுவும் எங்களை தொடாதபடி முற்றிலும் வேலியடைப்பீராக. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ அக்கினியில் போடப்பட்ட வேளையிலே அக்கினி அவர்களை சேதப்படுத்தக்கூடாதபடிக்கு அக்கினி மயமானவராய் அவர்களோடு இருந்தது போல், எம்மோடிருந்து எந்த பொல்லாங்கனின் அக்கினியும் எம்மை மேற்கொள்ளக் கூடாதபடிக்கு அக்கினி மதிலாய் வாரும், அக்கினிமயமானவராய் வாரும். 7 மடங்கு அக்கினிமயமானவராய் எம் மத்தியில் வாசம் பண்ணும். அக்கினி மணம் எம்மேல் வீசாதபடிக்கு சாத்தானின் சகல அக்கினிகளையும் இப்போதே முற்றிலும் சாம்பலாக்கிப் போடும். ஆமென்.

**8. மரணக்கட்டுகளிருந்து விடுதலைக்காக ஜெபம் : (பி 3/10; சங் 18/4,5)**

மரணத்தின் மேல் ஜெயம் உடையவரே! மரணக்கட்டின் மேல் ஜெயம் கொடுப்பவரே! மரித்தும் பிழைத்தவரே! மரித்தும் மகிமையான சரீரத்தில் எழுந்தவரே! மரித்தும் இன்றும் என்றும் இருப்பவரே! மரித்தேன் ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடு இருக்கிறேன் என்று சொன்னவரே! உயிர்த்தெழுதன் வல்லமை எம்மேல் இறங்குவதாக. உயிர்த்தெழுதன் வல்லமையினால் மரணத்தின் வல்லமைகள் முற்றிலும் அழிந்து போவதாக. மரணக்கட்டுகள், பாதாளக்கட்டுகள் அழிவதாக, வேதாளகட்டுகள் அழிவதாக. சூனியக்கட்டுகள் அழிவதாக, மந்திரக்கட்டுகள் அழிவதாக. பிசாசின் கட்டுகள் முற்றிலும் அழிவதாக. ஆண்டவரின் வல்லமைக்கு முன்பாக மற்ற எல்லா வல்லமைகளும் அழிந்து போவதாக! அந்தகார வல்லமைகள் அடங்கி போவதாக

பரிபூரண வாழ்வு தாரும். கொடிய பாவிகளின் வல்லமை அழிவதாக. வியாதியின் வல்லமைகள் அழிந்து போவதாக. மரணம் விழுங்கப்படுவதாக. உம் இரத்தத்தின் ஜீவன் மரணத்தை விழுங்கிப் போடுவதாக. ஆமென்.

**9. அக்கிரமத்தின் கட்டுகள் உடைக்கப்பட ஜெபம் : (ஏசாயா. 58/6; லூக். 1/38)**

கர்த்தாவே! உம் இரத்தத்தோடு இராப்போஜன ஐக்கியத்தால் உடன் படிக்கை பண்ணும் போது சகல அக்கிரமக்காரர்களின் கட்டுகள், அடிமைத்தனங்கள் உடைவதாக. மனுஷனுக்கு அடிமையாக அல்ல, உமக்கே அடிமையாக இருக்க உதவி செய்யும், எந்த அடிமைத்தனங்களும் எங்கள் மேல் வாய்க்காமல் போவதாக, அடிமைத்தன நுகங்கள் உடைந்து போவதாக. ஆமென்.

**10. லேகியோன் கட்டுகள் உடைக்கப்பட ஜெபம் : (சங். 94/20; 33/9; 24/8; மாற்கு 5/15)**

லேகியோன் படைகளை இலேசாய் துரத்துபவரே! இதோ, உமக்கு முன்பாக நிற்பவன் யார்? உம் கோபத்துக்கு முன்பாக எந்த அசுத்த ஆவிகள் நிற்க முடியும்? எந்த கொடிய பாவி நிற்பான்? எந்த கொடுங்கோல் ஆசனம் நிற்கும்? எந்த அந்தகாரலோகாதிபதிகள் நிற்க முடியும்? யார் உம்மைத் தடுக்க கூடும்? உம் கரத்திற்கு முன்பாக நிற்பவன் யார்? உம் கோபத்திற்கு முன்பாக பூமி அதிருமே! நீர் சொல்ல ஆகும்; கட்டளையிட நிற்குமே. நீர் ஒரு வார்த்தை சொன்னால் போதும். உம் வாயிருந்து கருக்குள்ள பட்டயம் கடந்து வரப் போதுமானது. யூத ராஜ சிங்கமே! யுத்தத்தில் பராக்கிரமமும் வல்லமையும் உள்ளவரே! உம் வாயிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் கடந்து வந்து வெட்டபட வேண்டிய அசுத்த ஆவிகளை வெட்டிப் போடும்படியாய் கிரியை செய்யும். சாத்தானின் பட்டயத்தைக் காட்டிலும் மேலான உம் பட்டயம், சத்துருக்களின் பட்டயத்தைக் காட்டிலும் மேலான உம் பட்டயம் யுத்தம் செய்து லேகியோன் கட்டுகளை உடைப்பதாக. கர்த்தரின் சத்தம் யுத்தம் பண்ணுவதாக.

**11. தேவன் அநியாயத்தை அடக்கிப் போட ஜெபம் : (சங். 82/1; 23/4)**

தேவ சபையிலே தேவன் எழுந்தருளுவீராக. தேவர்களின் நடுவிலே நியாயம் விசாரிப்பீராக. இம்மட்டும் எத்தனையோ தீமைகள் வந்தபோதும் நிர்மூலமாகாமல் காத்தவரே! கரம்பிடித்து செங்கடல்

வழியாய் நடத்தியவரே! மரண இருளின் பள்ளத்தாக்கில் அற்புதமாய் நடத்தியவரே! சத்துரு விழுங்காதபடி எமக்காய் நித்தம் யுத்தம் செய்பவரே! அநியாயங்களை அடக்கிப் போடும்படியாக சேனைகளின் கர்த்தராய் இறங்கி வாரும். நியாயம் விசாரிக்கிற தேவனாய் வாரும். சூனியத்தால் நெருக்கப்படுகிற பிள்ளைகளுக்காய் யுத்தம் பண்ணும், சூனியத்திற்கு முடிவு உண்டாவதாக. சூனியத்தை சூனியமாக்கும். சூனியம் சூனியமாய் மாறிப் போவதாக. திக்கற்று போனவர்களின் ஜெபங்களை, கூக்குரலை, மன்றாட்டை, அலட்சியம் பண்ணாத தேவனே! ஒருவரும் ஒத்தாசைக்கு இல்லாமல் போனாலும் ஆண்டவர் ஒத்தாசை பண்ணுவீராக. எல்லாரும் கைவிட்டாலும் கர்த்தர் கைபிடிப்பீராக. ஒருவரும் உதவ மறுத்தாலும் ஆண்டவர் உதவி செய்யும்படியாய் ஜெபிக்கிறோம். சீக்கிரம் அநியாயங்களை அடக்கிப் போட்டு நியாயம் செய்யும். அநியாயங்களுக்கு முடிவு உண்டாக்கும். அநியாயக் காரர்களுக்கு விரோதமாய் தீவிரமான சாட்சியாய் இருப்பீராக. ஆமென்.

## 12. கையிட்டுச் செய்யும் காரியங்களை தேவன் ஆசீர்வதிக்க ஜெபம் (உபா. 28/8; சங். 128/2)

அப்பா பிதாவே! நான் கையிட்டு செய்கிற காரியங்கள் வாய்க்காமல் இருக்கிறது. நான் எந்த காரியத்தை செய்தாலும் அது பிழையுள்ளதாய், குறையுள்ளதாய் இருக்கிறது. அது தவறுதலாய் இருக்கிறது. அதிலே நிறைவு இல்லை. அதிலே மற்றவர்களுக்கு பிரயோஜனம் இல்லை. அநேக நேரங்களில் அது தீமையாக முடிகிறது. நிந்தையாய் முடிகிறது, துன்பமாய் முடிகிறது. வாய்க்காமல் போகிறது. அப்பா பிதாவே! உம் ஆசீர் எனக்குத் தேவை. நீர் என்னை ஆசீர்வதிப்பீராக. நீர் ஆசீர்வதிக்கும் போது நான் கையிட்டுச் செய்யும் காரியங்கள் வாய்க்கும். இதோ உம் ஆசீர்வாதத்திற்காய் கெஞ்சுகிறேன். என்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதியும். எல்லா சாபங்கள் மாறிப்போவதாக. சந்ததி சந்ததியாய் வரும் சாபங்கள் மாறிப் போவதாக. என் பாவங்களையெல்லாம் கிருபையாய் மன்னித்து நான் கையிட்டுச் செய்யும் எல்லா காரியங்களையும் வாய்க்கப் பண்ணும். ஆமென்.

## 13. சாத்தான் சோதனையில் கர்த்தர் நமக்காக யுத்தம் பண்ணும் படியாக ஜெபம் : (சங். 76)

கர்த்தாவே! சாலேமிலே உம் கூடாரமும், சீயோனிலே உம் வாசஸ்தலமும் இருக்கிறது என எழுதப்பட்டுள்ளதே, எங்களுக்கு விரோதமாக யுத்தங்கள் நடக்கின்றன. பாவிகளின் யுத்தங்கள், சாத்தானின் யுத்தங்கள், அந்தகாரலோகாதிபதிகளின் யுத்தங்கள்,

மந்திரவாதிகளின் யுத்தங்கள், கள்ளத் தீர்க்கதரிசிகளின் யுத்தங்கள், கடைசிகால யுத்தங்கள் எங்களுக்கு விரோதமாக செயல்பட்டு கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு நாளும் பல பாடுகள் வழியாக கடந்து வருகிறோம். மகிமையின் ராஜாவே! யுத்தத்தில் பராக்கிரமம் உள்ள ராஜாவே! சேனைகளின் கர்த்தராய் எமக்காய் யுத்தம் பண்ணும், என்னோடு யுத்தம் பண்ணுபவர்களோடு யுத்தம் பண்ணும், எமக்கு விரோதமான வில்ன் அம்புகள், கேடகங்கள், பட்டயங்கள், யுத்தங்கள், வழக்குகள் யாவும் வாய்க்காமல் போவதாக. கொள்ளையுள்ள பர்வதங்கள் உருகிப் போவதாக. மந்திரவாதத்தின் கிரியைகள் அழிந்து போவதாக. கீழ்காற்றாகிய பரிசுத்த ஆவியினால் தர்ஷீஷின் கப்பல்கள் உடைவதாக. உமது கண்டிதத்தினால் இரதங்கள் உறங்கி விழுவதாக. உம் கோபம் மூளுவதால் உமக்கு முன்பாக நிற்பவன் யார்? எழுந்தருளும் கர்த்தாவே! கொடிய பாவிகளின் கோபத்தை அடக்கிப் போடும். பணபெலத்தால் கிரியை செய்பவர்களை அடக்கிப் போடும். பொல்லாத ராஜாக்களுக்கு பயங்கரமானவராய் வெளிப்படும். அந்தகார லோகாதிபதிகளுக்கு விரோதமாய் கொடிதாய் யுத்தம் பண்ணும். உம் கோபாக்கினை கடந்து செல்வதாக. உம் வல்லமையுள்ள தூதர்கள் கடந்து செல்வார்களாக. யுத்தத்திலே பெரிய வெற்றி தேவ ராஜ்ய பிள்ளைகளுக்கு உண்டாவதாக (ஆமென்)

**14. கர்த்தருக்கடுத்த காரியங்கள் மேல் பிரியம் தரும்படி ஜெபம் : (சங். 143/10)**

கர்த்தாவே! எங்களுக்கு தேவ ஜனங்களைக் குறித்த பிரியமில்லை. எங்கள் வீட்டாரைக் குறித்து மாத்திரம் பிரியமாய் இருக்கிறோம். உம் பணியைக் குறித்த பிரியம் இல்லை. எங்க்ள் பணிகளைக் குறித்து மாத்திரம் பிரியம் இருக்கிறது. உம் காரியங்கள் மேல் கரிசனை இல்லை. எங்கள் காரியங்களிலே கரிசனையாய் இருக்கிறோம். உம் ஊழியத்தின் மேல் பாரம் இல்லை. எங்கள் வீட்டின் வேலைகள் மேல் பாரம் இருக்கிறது. எங்களுக்கடுத்தவைகள் மேல் பாரப்படுகிறோம். உமக்கு அடுத்தவைகள் மேல் பாரப்படவில்லை. சரீரத்திற்கடுத்த காரியமாய் பாரப்படுகிறோம். ஆத்துமாவுக்கடுத்த காரியமாய் பாரமில்லை. பூலோகத்திற்கடுத்த காரியமாய் பாரப்படுகிறோம். பரலோகத் திற்கடுத்த காரியமாய் பாரப்படவில்லை. என்னை மன்னியும்; உம் மேல் பிரியம் தாரும். என் மேல் பிரியம் வைப்பவரே! ஸ்தோத்திரம். எல்லாவற்றைக் காட்டிலும் உம் மேல் பிரியம் தாரும். ஆமென்.

**15. முறுமுறுக்கும் சுபாவம் மாற ஜெபம் : (Iகொரி. 10/10)**

கர்த்தாவே! நீர் எங்களை பாதுகாக்கிறீர், போஷிக்கிறீர், படியளக்கின்றீர். எத்தனையோ தீமைகள் வந்த போதிலும் காப்பாற்றுகிறீர்; அற்புதமாய் நடத்துகிறீர். அதை மறந்து சில வேளைகளில் முறுமுறுத்துப் பேசுகிறோம். அது உம் பார்வைக்கு விசனமாக இருக்கிறது. உமக்கு பிரியமற்றதாய் இருக்கிறது. அநேக காரியங்களில் திருப்தியற்றவர்களாக இருக்கிறோம். உம் கரத்தை பெரியதாய் எண்ணவில்லை. எங்களை மன்னியும், முறுமுறுக்கிற சுபாவத்தை மாற்றி, ஸ்தோத்தரிக்கிற சுபாவத்தை எனக்குள் தாரும். உம் கோபம் என் மேல் பற்றாது இருப்பதாக. ஆமென்.

## கேள்வி - பதில்

**339. விசுவாசிகளுக்கு வியாதி வந்தால் என்ன செய்ய வேண்டும்?**

மருந்து சாப்பிடுவது தவறல்ல. மருந்துகள் கைவிட்டாலும் ஆண்டவர் கைவிடமாட்டார் என்பதை விசுவாசியுங்கள் விசுவாசிகளுக்கு வியாதி வந்தால், அவர்கள் முதலாவது ஆண்டவரை நோக்கி ஜெபிக்க வேண்டும். மருத்துவர்களையெல்லாம் பார்த்து விட்டு முடிவில் தேவன் சுகம் தரும் படி ஜெபத்திற்கு வருகிறார்கள். உடனே தேவன் சுகமளிக்க வேண்டுமெனவும் எதிர் பார்க்கிறார்கள். நேற்றும், இன்றும், என்றும் இயேசு மாறாதவர் (எபி.13/8) அவர் அன்றைக்கு எப்படி செய்தாரோ அதை இன்றைக்கும் செய்வார் என்பதை விசுவாசிக்க வேண்டும். மனுஷகுமாரன் உலகத்தில் இருந்த நாட்களில் எல்லா வியாதிகளையும் சுமந்தார். அதே ஆண்டவர் இன்றும் இருக்கிறார். அவரை விசுவாசிக்கும் போது உன் நோய்களை அவர் மாற்ற முடியும். 'என்னைத் தொடும் ஆண்டவரே'என ஜெபித்து நம் சரீரத்தை அவர் கைகளில் ஒப்புக் கொடுக்க வேண்டும். அவர் தொடுவார் என முழு விசுவாசத்தோடு ஜெபியுங்கள். நீதிமானின் ஊக்கமான ஜெபம் மிகவும் பெலனுள்ளது (யாக் 5/16) சோர்ந்து போகாமல் போராடி ஜெபியுங்கள். கண்ணீரோடு ஜெபியுங்கள், உபவாசித்து ஜெபியுங்கள்; பொருத்தனை பண்ணி ஜெபியுங்கள். காத்திருந்து ஜெபியுங்கள். அப்போது தீராத வியாதிகளும் உன்னை விட்டு தீரும்.

மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, தேவனுடைய ஒவ்வொரு வாயின் வார்த்தையினாலும் பிழைப்பான். ஆகவே அதிகமாய் வேதத்தை வாசியுங்கள் (மத்.4/4). தினமும் வேதத்தை

ஒழுங்காக வாசித்தால் கட்டாயமாக வியாதி மாறும். காய்ச்சல் மாத்திரை சாப்பிட்டால் காய்ச்சல் மாறிவிடும் என நம்புகிறாய், அதற்கே அவ்வளவு Power இருக்கிறதென்றால் அவர் வார்த்தைக்கு எவ்வளவு வல்லமை இருக்கிறது. அவர் வார்த்தை ஜீவனுள்ளது. அதை வாசித்து, இருதயத்தில் பதிய வைத்து, அதன்படி நடக்க வேண்டும். வேதவசனம் ஆவியாயும், ஜீவனுள்ளதாயும் இருக்கிறது. இது கணுக்களையும், ஊனையும் உருவக் குத்துகிறது. (எபி.4/12) ஆவியையும், ஆத்துமாவையும் வேதவசனம் பிரிக்கிறதென்றால் கணுக்களுக்குள்ளும் ஊனுக்குள்ளும் அது செல்கிறது. மருந்து போகாத இடத்திலும் அது பிரவேசிக்கிறது. இப்படிப்பட்ட ஜீவவார்த்தையை வாசித்து, விசுவாசித்து, வாயினால் அறிக்கை பண்ண வேண்டும். வாக்குத்தத்த வசனங்களை விசுவாசத்தோடு அறிக்கை பண்ணி ஜெபிக்க வேண்டும். வசனத்தை அறிக்கை பண்ணினால் சுகம் உண்டாகும்.

வசனத்திற்கு செவிகொடுக்காவிட்டால் எந்நாளும் நோய் தான் வரும். ஆகவே ஜீவ வார்த்தைக்கு கவனமாய் செவி கொடுங்கள். அப்போது வார்த்தையினால் பிழைப்பு உண்டாகும். இரவும், பகலும் அவர் வேதத்தில் பிரியமாயிரு. அப்போது பாக்கியம் பெறுவாய், சௌக்கியம் பெறுவாய், சரீர சுகம் பெறுவாய், மெய்யான விடுதலை பெறுவாய்.

### 340. ஞானம் என்றால் என்ன? அதைப் பெறுவது எப்படி?

தேவனைக் குறித்த அறிவும், பரலோகத்தைக் குறித்த அறிவும், சத்தியத்தைக் குறித்த அறிவும், அவர் சித்தத்தை குறித்த அறிவும், நாம் எப்படி வாழ வேண்டுமென்பதை பற்றிய அறிவும் தான் ஞானம். இவைகளில் பிரியமாயிருப்பவர்களுக்கு தேவன் ஞானத்தைக் கற்றுக் கொடுக்கிறார் (நீதி.2/6,7) சாலமோனின் ஞானத்தை கேட்கும்படி தூரதேசத்திருந்து சேபாதேசத்து ராஜஸ்திரீ வந்தாள். அதைப் பார்க்கிலும் ஞானமுடையவர் இயேசு. வேத வசனங்களை கற்றுக் கொள்ளும் போது நமக்கு ஞானம் கிடைக்கும்.

இந்த ஞானத்திற்கும், உலகப் பிரகாரமான அறிவுக்கும் சம்பந்தம் இல்லை. உலகப் பிரகாரமான அறிவு நம் வாய்க்கும், வயிற்றுக்கும் மட்டும் தான். இந்த அறிவினால் வாயும் வயிறும் தான் நிறையுமே தவிர, பரலோகம் கிடைக்காது. உலகப் பிரகாரமான படிப்பு இந்த உலகத்தின் வாழ்க்கைக்கு மட்டுமே, அவ்வுலக வாழ்க்கைக்கு அல்ல; இவ்வுலகப்

படிப்பை கொண்டு அவ்வுலகத்தை அறிந்து கொள்ள முடியாது. சத்தியத்தை அறிந்து கொள்ள முடியாது. அவரை அண்டிக் கொள்ளாமருக்கும் போது சத்தியத்தை அறிந்து கொள்ள முடியாது. 100 வசனங்களை மனப்பாடமாக க்றறுக் கொள்ளலாம். ஆனால் சத்தியத்தை ஆண்டவர் தான் விளக்கிக் கொடுக்க வேண்டும்.

**341. பரலோக ரகசியங்களை தேவன் நமக்கு விளக்கிக் கொடுக்க நாம் என்ன செய்ய வேண்டும்?**

வசனத்தின் மேல் வாஞ்சையாயிருக்க வேண்டும். தாகமுள்ளவன் மேல் தண்ணீரை ஊற்றுவார். நம் ஆத்தும தாகத்தைத் தீர்ப்பார். விருப்பத்தோடு அவர் வசனத்திற்கு செவி கொடுங்கள். அப்போது அவர் நமக்கு கற்றுக் கொடுத்து கொண்டேயிருப்பார். இயேசு சீஷர்களிடம் நீங்கள் என்னை விட்டுப் போக மனதாய் இருக்கிறீர்களா என கேட்டார். பேதுரு, “ஆண்டவரே, யாரிடம் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே'' என்றான் (யோ.6/68) வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு (யோ.5/39) எவ்வளவாய் சத்தியத்தை அறிகிறோமோ அவ்வளவாய் அதற்குக் கீழ்படிய வேண்டும். எவ்வளவாய் அவர் சித்தத்தை அறிகிறோமோ அவ்வளவாய் அவர் சித்தத்திற்குக் கீழ்படிய வேண்டும். வேதத்தில் எத்தனையோ காரியங்கள் மறைமுகமாக எழுதப்பட்டுள்ளது. அவர் வார்த்தை கருக்குள்ள பட்டயமாக இருந்தாலும், அவரை வாஞ்சிக்கிற பிள்ளைகளுக்கு அவைகளை விளக்கிக் கொடுக்கிறார். அவர் நமக்கு வெளிப்பாடுகளைத் தருவார். மறைவான மன்னாவைப் புசிக்கத் தருவார். மறைவான மன்னா என்பது மறைவான சத்தியங்களாகும். ஒளிப்பிடத்திலுள்ள புதையல்களை நமக்குத் தருவார், அவர் ஆலோசனைக்கு முடிவில்லை. அளவில்லை, அவைகளை எண்ண முடியாது. அவர் ஆலோசனைகள் ஆழமானவைகள். ஆகவே கர்த்தரின் வசனங்களைத் தேடி வாசியுங்கள்.

**342. அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும் (நீதி 31/11) இதன் விளக்கம் என்ன?**

ஸ்திரீ என்பது மணவாட்டியாகிய சபையைக் குறிக்கும். ஆண்டவரின் நம்பிக்கைக்குப் பாத்திரவான்களாக நாம் இருக்க வேண்டும். பொருத்தனை பண்ணியவைகளில் நாம் உண்மையுள்ள

வர்களாய் இருக்க வேண்டும். அவர் நம்மை ஊழியத்திற்கென்று அழைத்திருக்கலாம். ஆனால் அழைக்கப்பட்டவர்களெல்லாரும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களல்ல. அழைக்கப்பட்டது உண்மை தான். ஆனால் அவர் தெரிந்து கொள்ளுதலுக்கு நாம் பாத்திரவான்களாய் இருக்க வில்லை. முந்தினோர் பிந்தினோராயும், பிந்தினோர் முந்தினோரும் ஆவார்கள். ஒருவன் இரட்சிக்கப்பட்டு 1 வருடம் ஆகலாம். இன்னொரு வன் இரட்சிக்கப்பட்டு 10 வருடங்கள் ஆகலாம். இரட்சிக்கப்பட்டு 1 வருடமானவன் அதிகமாக உண்மையாகயிருந்தால் இன்னும் அதிகமாக அவனை பயன்படுத்துவார். நீ உண்மையாயில்லாவிட்டால் உன்னை பயன்படுத்தமாட்டார். ஆண்டவரின் இருதயம் நம்மை நம்பும் அளவுக்கு நாம் இருக்க வேண்டும். நம்மிடம் ஒப்படைக்கப்பட்டவைகளில் நாம் உண்மையாய் இருக்கிறோமா? உறுதியாய் இருக்கிறோமா என்பதை ஆண்டவர் கவனிப்பார். கர்த்தரிடம் நாம் பெற்ற ஊழியத்தை நிறைவேற்ற விரும்ப வேண்டும் (அப்.20/24). என்ன பிரச்சனை வந்தாலும், அழைத்த அழைப்பின்படி காரியங்களைச் செய்ய வேண்டும். அழைத்த அழைப்பின்படி செய்து நிறைவேற்ற வேண்டும். இப்படி இருந்தால் கர்த்தரின் இருதயம் நம்மை நம்பும், ஆண்டவரின் நம்பிக்கைக்கு பாத்திரவான்களாய் நாம் மாறுகிறோம். பவுலை தேவன் 3ம் வானம் வரைக்கும் அழைத்து சென்றார். ஆண்டவரின் நம்பிக்கைக்கு பாத்திரவான்களாய் நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். அவர் நாமத்திற்கு இகழ்ச்சி உண்டு பண்ணும் காரியங்களை நாம் செய்யக் கூடாது. நம் செயல்களால் ஆண்டவர் நாமத்திற்கு மகிமை உண்டாக வேண்டும். ஆண்டவர் நாமத்திற்கு கனவீனம் வராதபடி எச்சரிக்கையாய் இருங்கள்.

**343. 'வியாபார கப்பலை போல் இருக்கிறாள்' இதன் பொருள் என்ன? (நீதி 31/14)**

செய்கிற காரியங்களை வேகமாகச் செய்ய கிருபைகளை தேவனிடம் கேட்க வேண்டும். வியாபாரக் கப்பலைப் போல் இருந்தால் தான் நாம் குறிப்பிட்ட நேரத்திற்குள்ளாக அநேக காரியங்களைச் செய்ய முடியும். எறும்பிடமிருந்து ஞானத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். சுறுசுறுப்பை கற்று கொள்ள வேண்டும். ‘ஆண்டவரே, என்னை வியாபாரக் கப்பலை போல மாற்றும்’ என கேளுங்கள். இருட்டோடே எழும்பி அதிகாலையில் வேதம் வாசித்து ஜெபிக்க வேண்டும். ஊழியத்தைக் குறித்த பாரமுள்ளவர்களாக இருக்க வேண்டும். முதலாவது அவர் ராஜ்யத்தையும் நீதியையும் தேடுகிற பிள்ளைகளாய்

இருக்க வேண்டும். கைகளை பெலத்தால் இடைகட்ட வேண்டும். சரீர பெலன், ஆவி பெலன், ஆத்துமா பலம் வேண்டும். ஆத்துமாவில் பெலன் இருந்தால் தைரியம் வரும். ஆவியில் பெலன் இருந்தால் எந்த அசுத்த ஆவியும் நம்மைத் தொட முடியாது. நம் கரத்தோடு தேவகரம் இல்லாவிட்டால் நாம் வெற்றி பெற முடியாது. தேவ வல்லமையிலே நாளுக்கு நாள் பெலப்பட வேண்டும். வளர வேண்டும். ஜீவ அப்பத்தோடு எவ்வளவாய் ஐக்கியப்படுகிறோமோ அவ்வளவாய் ஆவியில் பெலன் வரும்.

**344. ஏன் உபவாசித்து ஜெபிக்க வேண்டும்?**

(i) மனிதனுக்கு ஆவி, ஆத்மா, சரீரம் உண்டு. உபவாசிக்கும் போது நம் ஆவி மேலே நிற்கும். சரீரம் கீழே போய் விடும். மேலே நிற்கும் ஆவியோடு தேவ ஆவியானவர் ஐக்கியப்படுவார். (1 கொரி 9/27)

(ii) எல்லாரும் சேர்ந்து உபவாசிக்கும் போது அதிக வல்லமை பெருகும். கூட்டு உபவாசம் தேவை. ஒரு நபர் தனியாக உபவாசிப்பதற்கும் கூட்டு உபவாசம் இருப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆண்டவரின் வல்லமை இறங்குகிற இடத்தில் சாத்தானின் வல்லமை நிற்க முடியாது; போகாத பிசாசும் ஓடிப்போகும். -சங்133

(iii) மணவாளன் தங்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும். அப்போது உபவாசிப்பார்கள். மணவாளனாகிய இயேசுவின் முழு பிரசன்னமும் இறங்கத்தக்கதாக உபவாசிக்க வேண்டும். உபவாசிக்கிற இடத்திலே ஆண்டவரின் பிரசன்னம் அதிகமாக இறங்கும். -மத்.9/15

(iv) அந்தகார ஆவிகள் உபவாச ஜெபத்தால் சுட்டெரிக்கப்படு கிறது. அக்கினியைப் போட வந்தேன். அது இப்பொழுதே பற்றியெரிய வேண்டுமென்று விரும்புகிறேன் என்றார் இயேசு. உபவாச ஜெபத்தில் தான் அக்கினி இறங்கும், எ□ா ஜெபித்த போது அக்கினி இறங்கியது. புதிய ஏற்பாட்டு காலத்தில் அக்கினி இறங்குவதை நாம் கண்களால் காண முடியாது. ஆனால் அதை நாம் விசுவாசிக்க வேண்டும். ஆண்டவரின் அக்கினி பிசாசின் அக்கினியை விட பெரியது. அந்த சாத்தானின் அக்கினியை மேற்கொள்ள வேண்டுமானால் உபவாசித்து ஜெபிக்க வேண்டும். உபவாசித்து ஜெபி; வாசித்து ஜெபி; விசுவாசித்து ஜெபி - லூக்கா 12/49

உபவாசித்து, விசுவாசித்து எந்த பிரச்சனையும் மேற்கொள்ளு கிறவர்களாக நாம் மாற வேண்டும்.

**345. சாத்தானுக்கு எதிரான யுத்தத்தில் ஜெயம் எடுப்பது எப்படி?**

யுத்தநாளுக்கென்று குதிரை ஆயத்தமாக்கப்படும். ஆனால் ஜெயமோ கர்த்தரால் வரும் (நீதி.21/31). யுத்தத்திலே உன்னை தமது சிறந்த குதிரையாக நிறுத்த வேண்டுமானால் நீ குதிரையைப் போல எதற்கும் பயப்பட கூடாது (சகரியா 10/3). ஆவியிலே பெலன், ஆத்துமாவிலே பெலன், சரீரத்திலே பெலன் நமக்கு இருக்க வேண்டும். குதிரையின் தொண்டையில் குமுறல் வருவது போல நம் தொண்டையில் கர்த்தரின் வசனம் இருக்க வேண்டும். ஜீவ வசனம் யுத்தம் செய்யும். வெட்டுக் கிளியை மிரட்டுவது போல குதிரையை மிரட்ட முடியாது. அது போல பிறருடைய மிரட்டுதலுக்கு நாம் பயப்படக் கூடாது; தைரியமுள்ளவர் களாக இருக்க வேண்டும். நம்மைக் கண்டு சாத்தானும், சத்துருக்களும் பயப்பட வேண்டும். ஆனால் நாம் சாத்தானுக்கும், சத்துருக்களுக்கும் பயப்பட கூடாது.

சாத்தானின் பட்டயத்திற்கு நாம் பயப்படக்கூடாது (யோபு39/22). நம் கைகளில் வேதவசனமாகிய ஆவியின் பட்டயம் உண்டு. அதைக் கொண்டு நாம் ஜெயம் எடுக்க வேண்டும். ஜீவ வசனத்தை அடிப்படையாக வைத்து நாம் ஜெபித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஜீவ வசனத்தை வைத்து ஜெபித்தால் அந்த பட்டயம் வெட்ட வேண்டியவைகளை வெட்டும். ஜீவ வசனம் எல்லா பட்டயங்களிலும் மேலான பட்டயம், பூமியிலுள்ள எந்த ஆயுதமும் வசனத்திற்கு முன்பாக நிற்க முடியாது. வசனத்தைக் கொண்டு ஜெபிக்கும் போது அந்த பட்டயம் கடந்து சென்று யுத்தம் செய்யும். ஜெபிக்கிற நமக்கு முதலாவது வெற்றி கிடைக்கும். இரண்டாவது நம் வீட்டாருக்கு; மூன்றாவது நம் சபையாருக்கு, நான்காவது உலகிலுள்ள எல்லா கர்த்தரின் பிள்ளைகளுக்கும் வெற்றி கிடைக்கும்.

முழங்கால்களை முடக்கும் போது நமக்கு வெற்றி உண்டாகும். குதிரை தூரத்திருந்து யுத்தத்தை மோப்பம் பிடிக்கும் நாமும் சாத்தான் நமக்கு விரோதமாக வருகிறதை மோப்பம் பிடிக்க வேண்டும். யுத்தத்திலே சிறந்த குதிரைகளாக மாற வேண்டும். ஜெபிக்கும் போது ஜெயம் கர்த்தரால் வரும், தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களை பெலப்படுத்த வேண்டும் (ஏசாயா 35/3)

1. தனி ஜெபம்
2. குடும்ப ஜெபம்
3. சபை கூடி ஜெபம் பண்ண வேண்டும்.

**346. எப்படிப்பட்ட ஆராதனையை தேவன் ஏற்றுக் கொள்வார்?**

ஆவியாயிருக்கிற தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும். பொய்யர்களாகவும், ஏமாற்றுபவர் களாகவும் இருந்து கொண்டு அவரைத் தொழ முடியாது. சாத்தானை வணங்க பரிசுத்தம் தேவையில்லை. ஆனால் ஆண்டவரை வணங்க பரிசுத்தம் தேவை. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். இருதயத்தில் பகை, அசுத்தம், இச்சை, காமவிகாரம், விரோதம், வைராக்கியம், பொறாமை, எரிச்சல், பொருளாசை இருந்தால் இருதயம் அசுத்தமாக இருக்கும். நம் ஆராதனையை அவர் ஏற்றுக் கொள்ளத்தக்க விதத்தில் ஆராதித்தால் தான் அதை ஏற்றுக் கொள்வார். பரிசுத்தமில்லாமல் ஆராதித்தால் அந்த ஆராதனையை அவர் ஏற்றுக் கொள்ளமாட்டார். நாம் உண்மையற்றவர்களாயிருந்தால் அவர் ஆசீர் நமக்கு வராது. ஒழுங்காக ஆராதனைக்கு வந்தாலும் அவருக்கு பிரியமற்றவர்களாக இருந்தால், அவர் ஆசீரை பெற முடியாது. இஸ்ரவேலை ஆசீர்வதிக்கவே அவர் விரும்புகிறார். அவருக்குப் பிரியமுள்ள சுத்தமுள்ள ஆராதனையை ஏறெடுக்க வேண்டும். (-யோ4/24; ஏசா 1/11-16; மத்.5/8)

**347. ஏன் கர்த்தருக்கு மாத்திரம் பயப்பட வேண்டும்? ஏன் சாத்தானுக்கு பயப்படக் கூடாது? மாற்கு 4/39; அப்.3/15)**

சீஷர்கள் காற்றும் கடலும் கொந்தளித்தவுடன், "ஆண்டவரே உமக்கு கவலையில்லையா" என்றார்கள். அது போல் சாத்தானும் சத்ருக்களும் கொந்தளிப்பார்கள். உடனே தேவன் நம்மோடு இல்லை என எண்ணி அவரை மறுதத்து விடாதிருங்கள். தேவ பிள்ளைகளின் உயிர் பிசாசு கையில் இல்லை. நீ தேவ பிள்ளையாக இருந்தால் உன் உயிர் கர்த்தரின் கையில் இருக்கிறது. அவர் எல்லாம் பார்த்துக் கொள்வார். உன் ஜீவனைக் குறித்து பயப்படாதே. கர்த்தர் உனக்கு ஜீவாதிபதியாய் இருக்கிறார். எத்தனை தீமைகள் வந்தாலும் பயப்படாதிருங்கள். உன் காலத்திற்கு முன் பிசாசு உன்னைக் கொல்ல முடியாது. அவர் மரணத்தின் மேல் ஜெயம் கொடுக்கிற தேவன். பாதாளக் கட்டுகளை உடைக்கிற தேவன் நம் ஜீவனுள்ள தேவன்.

சாகப்போகிற மனுஷனுக்கு பயப்படாதே. பிசாசைவிட மனிதன் பெரிதல்ல; பொல்லாதவனின் ஆயுதம் பிசாசு. பிசாசை ஆண்டவர் நசுக்கும் போது அவன் கொம்பு முறிந்து போகும். துன்மார்க்கரின் கடைவாய்ப் பற்களை நொறுக்கிப் போடுவார். துன்மார்க்கனுக்கு பல்

போல சாத்தான் இருக்கிறான். இந்த சாத்தானை அவர் அடித்து நொறுக்குவார். நமக்கு ஜெயம் கொடுப்பார். ஆகவே தேவனுக்கு மாத்திரமே நாம் பயப்பட வேண்டும்.

**348. ஆண்டவரைத் தரிசிக்க நாம் என்ன செய்ய வேண்டும்?**

ஆண்டவரைத் தரிசிக்க வேண்டுமானால் நமக்குத் தேவை இருதய சுத்தம். நாமாக நம் இருதயத்தைக் கழுவ முடியாது. ஆண்டவரால் மட்டுமே நம் இருதயத்தைக் கழுவ முடியும். அவர் தம் சொந்த இரத்தத்தால் நம்மைக் கழுவுகிறார். இயேசுவின் இரத்தத்தை நாம் காணவில்லை. இயேசுவையும் நாம் காணவில்லை. ஆனாலும் வசனம் சொல்வதை நாம் விசுவாசிக்க வேண்டும். அப்போது நம் இருதய வீடு சுத்தமாகும். பரிசுத்தம் என்னும் அலங்காரம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும். நம் இதய வீட்டில் என்னென்ன அழுக்கு இருக்கிறது என்பதை சோதித்துப் பார்க்க வேண்டும். நம் இதய வீட்டை அவர் கழுவ இடம் கொடுக்க வேண்டும். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கிய வான்கள். அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள் (மத்.5/8)

**349. நம்மிலுள்ள இருள் மாற நாம் என்ன செய்ய வேண்டும்?**

நம் இதயவீட்டிற்குள் ஆண்டவரை வருந்தி அழைக்க வேண்டும். தேவன் நமக்குள் வாசம்பண்ண நாம் இடம் கொடுக்க வேண்டும். மின்சாரம் இருந்தாலும் Switch போட்டால் தான் இருள் மாறும். அது போல ஆண்டவர் உலகிற்கு வெளிச்சமாக இருந்தாலும் அவரை நோக்கிக் கூப்பிட்டால் தான் நம் இருள் மாறி வெளிச்சம் வரும். அவரை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு அவர் ஒளியாக வர முடியாது.

'நான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன்' என இயேசு சொன்னார். அவருக்கு நம் இதயத்தை முழுவதுமாகத் திறக்க வேண்டும். எவ்வளவாய் ஆண்டவருக்கு இடம் கொடுக்கிறோமோ அவ்வளவாய் சாத்தானின் கிரியைகள் நம்மை விட்டு ஓடிப்போகும். ஆண்டவரோடு அதிக நேரம் செலவு பண்ணும் போது சாத்தானின் கிரியைகள் மேல் நமக்கு வெற்றி உண்டாகும். மனுஷனோடு பேசும் நேரத்தை விட அதிகமாக ஆண்டவரோடு பேச நேரமெடுக்க வேண்டும். கர்த்தரோடு நேரம் செலவழிக்க உலக சிநேகமும், உலக கவலையும் தடையாக வரலாம். இதை விட்டு விட்டு அதிக நேரம் தேவனுக்கென்று செலவழிக்க வேண்டும். அதிகமாக வேதம் வாசித்து ஜெபிக்க வேண்டும். அப்போது தேவபிரசன்னம் நம்மை ஆட்கொள்ளும். இருள் மாறி வெளிச்சமும், பிரகாசமும் உண்டாகும். (வெளி.3/20; யோ.8/12)

# தற்பரிசோதனைக் கேள்விகள்

501. கிறிஸ்து உனக்கு இரங்கி உன்னை மன்னித்தது போல, நீயும் பலவீனமுள்ளவர்களுக்கு இரங்குகிறாயா? எபி 5/2
502. கிறிஸ்து கொடுத்த கனமான ஊழியத்தை உண்மையாய் செய்கிறாயா? எபி 5/4
503. உன்னை நீயே உயர்த்துகிறாயா? அல்லது இயேசு உன்னை உயர்த்த நீ விரும்புகிறாயா? எபி 5/5
504. பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் ஜெபிக்கின்றாயா? எபி 5/7
505. தேவனிடம் பயபக்தியாய் இருக்கிறாயா? எபி 5/7
506. பாடுகளினால் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டாயா? அல்லது பின்வாங்கிப் போனாயா? எபி 5/8
507. ஆவிக்குரிய வாழ்வில் உன் வளர்ச்சி எந்நிலையில் இருக்கிறது? எபி 5/12
508. ஆவிக்குரிய நிலையில் நீ சிறுகுழந்தை போல் பாலை உண்கிறாயா? அல்லது பலமான ஆகாரமாகிய வேத வசனங்களை கைக் கொள்ளும் பூரண வயதுள்ளவனாக மாறியிருக்கிறாயா? எபி 5/12-14
509. மனந்திரும்பியிருக்கிறாயா? எபி 6/1
510. தேவன் மேல் முழு விசுவாசமும் வைத்திருக்கிறாயா? எபி 6/1
511. அஸ்திபார உபதேசங்களில் உறுதியாக இருக்கிறாயா? எபி 6/2
512. பூரணர்களாக மாற முயற்சி செய்கிறாயா? எபி 6/2
513. தேவனை உன் வார்த்தையால், கிரியைகளால் மறுத்துப் போனாயா? அல்லது பிரகாசமுள்ள வாழ்க்கை வாழுகிறாயா? எபி 6/4-6
514. ஆண்டவர் நாமத்திற்காக என்ன அன்புள்ள பிரயாசம் எடுக்கிறாய்? கிரியை செய்கிறாய்? எபி 6/10
515. வாக்குத்தத்தங்களை விசுவாசித்து சுதந்தரித்துக் கொள்கிறாயா? எபி 6/11
516. உன் நம்பிக்கையில் உனக்கு பூரண நிச்சயமுண்டா? எபி 6/12
517. வாக்குத்தத்தம் உன்னில் நிறைவேற பொறுமையாய் காத்திருக்கின்றாயா? எபி 6/13
518. நம் முன்னோடினவராகிய இயேசுவின் மாதிரியைப் பின் பற்றி ஓடுகிறாயா? எபி 6/20
519. சாலேமின் ராஜாவின் சமாதானம் உனக்கு இருக்கிறதா? எபி 7/1,2
520. தசமபாகம் ஒழுங்காக கர்த்தருக்கு செலுத்துகின்றாயா? எபி 7/2
521. நீதியின் ராஜா உனக்கு செம்மையாய் நீதி செய்வார் என்பதை விசுவாசிக்கின்றாயா? எபி 7/2
522. நமக்காக பிதாவிடம் வேண்டுதல் செய்கிறவர் பிதாவிடம் இயேசு மட்டுமே என்பதை விசுவாசிக்கின்றாயா? எபி 7/25
523. நம்மை முற்று முடிய இரட்சிக்க வல்லவர் இயேசு மட்டுமே என்பதை விசுவாசிக்கின்றாயா? எபி 7/25
524. இயேசுவே நமக்கு ஏற்ற நித்திய பிரதான ஆசாரியர் : என்பதை விசுவாசிக்கின்றாயா? எபி 7/26